# கட்டுரைப் போட்டி

முழுப்பெயர் => தியாகராஜா - ஹசானா

வயதுப்பிரிவு => 16 - ௨9

வயது => ௨௨

மின்னஞ்சல் => Kasana.thiya@gmail.com

தே.அ.அ. இலக்கம் => 996802450V

மாவட்டம் => மட்டக்களப்பு

முகவரி => செல்லப்பிள்ளையார்
கோவில் வீதி, எருவில்
கிழக்கு, பாரதிபுரம்,
களுவாஞ்சிகுடி.

தொலைபேசி இலக்கம் => 0784224300

தலைப்பு :-

ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்.

ஒரு மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்ற மனிதாபிமான குணங்கள்.

ஒரு நாட்டில் மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மனிதாபிமான குணங்களான மன்னிப்பு, பொறுமை மற்றும் நம்பிக்கை போன்றன தலை சிறந்ததாக அமைகின்றன. ஒவ்வொரு மதங்களும் இவ்வாறான குணங்களைக் கடைப்பிடிக்கும் பொழுது சமயங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படுகின்றது. இந்த வகையில் இவ்வாறான மனிதாபிமான குணங்களின் அவசியம் பற்றி விளக்கமாக நோக்குவது சாலச்சிறந்ததாகும். அந்தவகையில் "குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று. குற்றங்களை மறந்து விடும் மனத்தால் ஒன்று." என்ற பாடல் மன்னிக்கும் மனப்பான்மையை எடுத்துக்காட்டுகிறது. மன்னிக்கும் பண்பு தெய்வீக பண்பு என்பர். இதையே வள்ளுவர் "இன்னா செய்தாரை மறந்தாலு ஆனால், அவர் செய்த தீமையை மறந்து நன்னயம் செய்தல் வேண்டும்" என்கிறார். தவறு செய்தவனை மன்னிக்கும் போது அவன் திருந்த வாய்ப்பு கிடைக்கிறது. அவ்வாறு இல்லாமல் அவனைத் தண்டிக்கும் போது நம் மனத்தூய்மை கெடுகிறது.

பலர் ஒன்று கூடி வாழும் பொழுது பிரச்சினைகள் உருவாகும். அந்த நேரத்தில் நாம் மன்னிக்காது போனால் நம் வாழ்க்கையே கசப்பாகி விடும். மனிதனாகப் பிறந்த யாரும் தவறு செய்யாமல் இருக்க முடியாது. தவறு செய்வது மட்டுமல்ல, தவறு செய்ய நினைத்தால் கூட குற்றம்தான். ஆகவே, தவறுகளை நினைக்காமல் இருப்பது மிக முக்கியமாகும். மன்னிப்புகோருதல், மன்னிப்பு வழங்குதல் போன்ற பண்புள்ள செயல்களால் மதம் மற்றும் மனித இனம் என்றும் அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் வாழும். மன்னிக்கும் குணமும் மறக்கும் பண்பும் இல்லாததால் வாழ்வில் பலவிதமான ஏற்ற இறக்கங்களை சந்திக்கின்றோம். பல்வேறு சூழ்நிலைகளால் தவறு செய்யும் மனிதர்களை அப்போதே மறந்து மன்னிக்கும் மனோபாவம் வளர்ந்துள்ளது. பிறருக்கு எதிராக பழிவாங்கும் எண்ணம் உருவானாலும், மன்னிக்கும் மனோபாவம் இருத்தல் சிறந்ததாகும்.

இல்லற வாழ்வில் மனைவி, குழந்தைகள், பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருடன் ஏற்பட்ட பலவிதமான அனுபவங்கள், மத ரீதியான பிரச்சினைகள் அதனால் ஏற்பட்ட கோபத்தின் விளைவாக எழுந்த சங்கடங்கள் போன்றவை மன்னிப்பு கேட்பதிலும், மன்னிப்பு வழங்குவதிலும் சரியாகி விடுகிறது. மனிதர்களின் வாழ்க்கைக்கு உண்டான அத்தனை சிரமங்களையும், தீமைகளையும், தவறுகளையும் மன்னிக்கும் மனோபாவத்தினால் வெல்ல முடியும். பிறர் நமக்கு தீங்கு செய்த போதிலும் அவர் மீது நமக்கு நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருந்தும் அப்படி செய்யாது மன்னிக்கும் போது மனம் இன்பம் அடையும். உலகெங்கும் இன்று நிலவும் மத வன்முறைகளுக்கும், பிற தீமைகளுக்கும் அடிப்படை காரணம் மன்னிக்கும் மனப்பான்மை இல்லாததே. உலக அமைதிக்கும், மத வளர்ச்சிக்கும் மன்னிக்கும் மனோபாவம் என்பது அடிப்படையாகும்.

மேலும், மதத்தினை பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மனிதாபிமான இணைப்புகள் பொறுமை சாலச் சிறந்தது. புத்தகங்கள் அறிவின் திறவுகோல். அந்த திறவுகோல் அறிவை மட்டும் திறக்கின்றதா? அல்லது பிற உணர்வுகளை திறக்கின்றதா? ஆயிரம் பக்கங்களைக் கொண்ட புத்தகத்தை ஒரு அறிவாளி பொறுமையுடன் படித்து மேலும் பேரறிஞன் ஆகின்றான். ஆனால் அப் பேரறிஞன் வாழ்க்கையில் சாதிக்கின்றானா? இல்லையா? என்பதை அவனது வாழ்க்கை நெறிமுறையில் காண முடியும். பல புத்தகங்களை கற்றுணர்ந்த பேரறிஞனுக் இப் பொறுமையைக் கடைபிடிக்காத வாழ்க்கைத்துணை அமையும் போது அவன் வாழ்க்கையில் சாதிக்க வேண்டியவைகள் ஏராளமாக இருக்கும். அத்தனைக்கும் பொறுமை ஒன்றே மூலகாரணமாய் அமையும். பொறுமை இல்லாதவரிடம் அறிவும் தாண்டவமாடும். இவ் அறிவத்தினால் ஒருவருடைய வாழ்க்கை தேவை இல்லாத பக்கங்களை கிழித்து எறிவதைப் போல் ஆகிவிடும்.

ஒரு மனிதன் பொறுமையை எல்லாச் செயல்பாட்டிற்கும் பயன்படுத்தினால், அது சோம்பேறித் தனமாகும். ஒரு செயலுக்கு பொறுமையைக் கடைபிடித்தால் அது கனியைத் தரும். கனிவு வேறு. சோம்பல் வேறு. சோம்பலையும், கனியையும் பொறுமைதான் விளைக்கிறது. பிறரை வெல்ல வேண்டுமென்றால் அவனிடம் பொறுமை இருக்க

வேண்டும். அப்போதுதான் நிலையை எடுக்க முடியும். கடலினும் மிகப் பெரியது பொறுமை என்பார்கள். வற்றாத கடலே பெரிது என்றால் அதைவிட பொறுமை எவ்வளவு பெரியதென்று ஒருவருடைய செயல் மூலம் அறிய முடியும். சாதிக்க நினைக்கின்றவர்களிடம் பொறுமை அதிகளவில் பெரிதாக நிறைந்திருக்கும். சாதிப்பதற்கும், மத வளர்ச்சிக்கும் அறிவும், பொறுமையும் இருக்க வேண்டும். அறிவு என்பது நன்மை தீமைகளைப் பிரித்துப் பார்ப்பதற்கு திறக்கின்ற உணர்வின் திறவுகோல். பொறுமை என்பது அந்த உணர்வின் திறவுகோலால் பல செயல்களை வாழ்க்கையில் செய்து காட்டக் கூடியதாகும். காற்று பலமாக வீசினால் கடல் கொந்தளிக்கும். கடல் கொந்தளித்தால் "சுனாமி" தலை விரித்தாடும். இதனால் அழிவுகள் ஏற்படும். ஒரு மனிதனுக்கு ஆணவம் என்ற காற்று வீசினால் "கோபம்" என்ற சுனாமி அவனிடம் நிறைந்திருக்கும். இதனால் அழிவு அவனுக்கு மட்டுமல்ல அவனைச் சார்ந்த மதம், சமுதாயத்திற்கும் தான்.

சிந்திக்க தெரிந்தவன் தான் சாதனை சிகரத்தை எட்டத் தெரிந்தவன். மனிதனுக்கு பல உணர்வுகள் அவனுக்குள் புதைந்திருக்கும். பரிவு காட்டுதல், பிறருக்கு உதவி செய்தல், கண்ணியம் காத்தல், கட்டுப்பாட்டை கடைப்பிடித்தல் இவை யாவும் ஒன்றுபட்ட உணர்வின் வெளிப்பாடாகும். பொறுமைக்கு மறுபெயர் சகிப்புத் தன்மை. சகித்துக் கொள்ளாதவன் சாதிக்க தெரியாதவன். பல புத்தகங்களை கற்றவனை புத்திசாலி என்கின்றோம். அப் புத்தகங்களை வாழ்க்கையில் கடைப்பிடிக்க தெரிந்தவனை பொறுமைசாலி என்கின்றோம். மத சுதந்திரத்திற்கும், வாழ்வின் சாதனைக்கும் அறிவும், பொறுமையும் மிக அவசியம். ஒரு கட்டிடம் உருவாக வேண்டுமென்றால் அதற்கு கட்டிட பொறியாளரின் கட்டிட வரைபடம் மிக அவசியம். அதற்கு தேவை பொறுமை. அறிவும், பொறுமையும் மனிதனுக்கு இரு கண்களைப் போன்றது.

அறிவுக் கண் திறந்தவனும், பொறுமைக்கண் திறந்தவனும் அமைந்து விட்டால் வாழ்க்கையின் பல உன்னத செயல்கள் சுலபமாக இருப்பதுடன் மத சுதந்திரம் ஏற்படும். பொறுமை பூக்களைப் போல மிகவும் மென்மையானது. பொறுமையிடம் உண்மை இருக்கும். பொறுமை ஒரு தவறு செய்ததும் தன்னையே திருந்த வைக்கும். உப்பை உண்டவன் தண்ணீர் குடித்தே ஆக வேண்டும். தப்பு செய்தவன் தண்டனை



Scanned with CamScanner

பெற்றே ஆக வேண்டும். தவறுதலாக உப்பு தின்றுவிட்டால் நாம் தண்ணீர் குடிக்கின்றோம். தண்ணீரை குடித்ததும் உப்பின் கரிப்பு தன்மை ஜீரணம் ஆகி விடும். பொறுமையை கடைபிடிப்பதால் கோபமும் அழிந்து விடும். ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் உள்ளதைப் போல் பொறுமைக்கும் இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று சிரிப்பது. மற்றொன்று சாதிப்பது. இயல், இசை, நாடகம் இம் மூன்றுக்கும் தேவை பொறுமை. பொறுமையுடன் இம் மூன்றையும் ஒருவன் கற்றுக் கொண்டால் அவன் தான் சாதிக்க தெரிந்தவன். இதன் மூலம் ஒரு மதத்தினை பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மனிதாபிமான குணங்கள் பொறுமை மூலம் பிறந்ததாகும்.

மேலும், மன்னிப்பு, பொறுமை போன்ற மனிதாபிமான குணங்கள் மட்டுமல்லாது நம்பிக்கையும் மதம் அல்லது நம்பிக்கையைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்திற்கான மனிதாபிமான குணங்களுள் தலை சிறந்தொன்றாக அமைகின்றது. அந்தவகையில் நம்பிக்கை என்பது உளவியல் சார்ந்த விடயமாகும். பெரும்பாலும் “நம்பிக்கை” என்பது அறிவுக்கு அப்பால், ஒருவரின் அல்லது ஒன்றின் மீதுள்ள பற்றையும், கூடிய விருப்பினையும் ஏற்படும் உளம் சார்ந்த வெளிப்பாடாகும். அதனாலேயே ஒருவர் கொண்ட நம்பிக்கையினை இன்னொருவர் கேள்விக்குள்ளாக்கும் போது அதன் சரி பிழைகளை ஏற்கும் மனநிலையை அநேகமான மனிதர்கள் இழந்து விடுகிறார்கள். மனித மனங்களில் ஏற்படும் நம்பிக்கைகள் அவரவர் பிறக்கும், வளரும், வாழும் சூழல் மற்றும் சமூக சந்தர்ப்ப சூழ்நிலைகளை பொறுத்து ஏற்படுகின்றன.

ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கை இன்னொருவருக்கு மூட நம்பிக்கையாகவும், தான் நம்பும் நம்பிக்கையே உண்மையானதாகவும் நினைக்கும் நிலையால் மனித மனங்கள் உந்தப்படுகின்றன. நம்பிக்கை இல்லாமல் வாழ்க்கையில் முன்னேறுவது அரிது. ஆத்திகனுக்கு கடவுள் நம்பிக்கை. நாத்திகனுக்கு நம்பிக்கை கடவுள். அவ்வளவு தான் வித்தியாசம். நம்பிக்கை இல்லாத விடயம் இல்லை. நாம் ஒரு செயலைச் செய்ய ஆரம்பிக்கும் போதே பயமும் நம்மைப் பற்றிக் கொள்கிறது. இது இயற்கையின் நியதி. வீடு என்று இருந்தால் சமையலறையும் இருக்கும். கழிவறையும் இருக்கும். எந்த செயல் செய்வதற்கு முக்கியத்துவம் கொடுக்க


Scanned with CamScanner

வேண்டும் என நமக்கு தெரியும். நம் செயலின் வெற்றியைத் தீர்மானிக்கும் திறன் நாம் வைக்கும் நம்பிக்கை மீது தான் உள்ளது. நாட்டிற்கும் சரி, வீட்டிற்கும் சரி நம்பிக்கை மிக மிக அவசியம். இதன் மூலம் மத சுதந்திரம் உண்டாகும்.

முடியாது என்ற மூட நம்பிக்கை கொண்டவர்களுக்கு வாழ்க்கை என்றுமே பாலை வனம் தான். முடியும் என்பதை மூலதனமாக்கி கொண்டவர்களுக்கு வாழ்க்கை என்றுமே சோலை வனம் தான். நம்பிக்கை என்பது உங்களை பிணைப்பதற்கான கயிறல்ல. உங்களை உயர்த்துவதற்கான கயிறாகும். எனவே மத சுதந்திரத்திற்கான மனிதாபிமான குணங்கள் நம்பிக்கை இன்றியமையாத தொன்றாகும். இவ்வாறான நல்ல பழக்கவழக்கங்களை நாமும் கடைப்பிடித்து மற்றவர்களுக்கும் பரவச் செய்வோம். பிறர் தவறுகளை குற்றங்களை மறப்போம் அவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்வோம். தண்டனையால் முடியாத மாற்றத்தை மன்னித்தல், பொறுமை, நம்பிக்கை போன்ற குணங்கள் நிகழ்த்தி விடுகிறது. மன்னிப்பளித்தல், பொறுமையாக இருத்தல், நம்பிக்கை என்பன நாளும் நம்மை நலமாக வைத்திருப்பதால் மறப்போம்... மன்னிப்போம்... மத சுதந்திரத்தை பெறுவோம்.. மகிழ்ச்சியாக வாழ்வோம்.

சொற்களின் எண்ணிக்கை :- 920